18th February 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தத் தாலுகா காவில் ஏராளமான கால்நடை வைத்தியசாலைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆனல், புதிதாக வைப்பதற்கு இப்போது யோசனையில்லை என்றுநான் நான் சொன்னேன். வட்டார வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகவும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI A. A. RASHEED: இந்தக் கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு விவசாயிகள் வருகின்றனரா அல்லது கால்நடைகள் வருகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்குச் சென்று அங்குள்ள கால் நடை ஆஸ்பத்திரிகளில் யார் வருகிருர்கள் என்று பார்த்தால், தெரிந்து கொள்ளலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Sir, there is dearth of personnel in the Veterinary Department to man these dispensaries; so, will the Government take this factor also into consideration before starting these dispensaries? or, there is no point in starting them without the necessary technical personnel to run them.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir; Government do take all that into consideration. As the hon. Member is aware, we have organized the Stockmen Course to give training through a short-term course. They are also fitted into these centres.

SRI A. A. RASHEED: Sir, on a point of personal explanation. Peranambattu is not my constituency and therefore I do not visit.

MR. SPEAKER: That is all right.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I did not say, Sir, 'he did not go', but I said, 'let him go'.

SRI S. SADASIVAM: கீ வில்லேஜ் சென்டர் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இடங்களில் கால்நடை ஆஸ்பத்திரிகளை தொடர்ந்து சேர்த்து ஆரம்பிக்க திட்டம் உண்டா ?

MR. SPEAKER: இதற்குத் தனியாக கேள்வி போடவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதுபற்றி அவ்வப் போது பரிசீலனை செய்யப்பட்டு, தேவைப்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

Southern Zonal Council

*** 321 Q.—SRI S. M. ANNAMALAI:** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில ளிப்பாரா—

1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி பாண்டிச்சேரியில் நடந்த தென் மண்டலக் கவுன்சிலில் **Power Development Commitee** நடைபெற்ற விஷயங்கள் யாவை ?

[18th February 1961

THE HON. SRI V. RAMAIAH : The subjects discussed at the meeting are—

(i) Review of action taken on the discussions of the previous meetings of the Power Development Committee.
(ii) Construction of 220 KV line between Andhra and Madras.
(iii) Inter-linking Pondicherry and Madras State.
(iv) Uniform tariff for all the States of Southern Grid.
(v) Economic Steel sections to be rolled for verticals.
(vi) 220 KV line between Mysore and Madras.

SRI S. M. ANNAMALAI : ஸார், நம்முடைய மாகாணத்திலுள்ள ஜலத்தைக்கொண்டு வேண்டிய மின்சாரம் செய்தாகிவிட்டது. மேலும், பிற மாகாணங்களிலுள்ள ஜலத்தை நல்ல முறையில் ஈடுபடுத்தி, மின்சாரம் பெருக்குவதற்குரிய சாதனங்கள் பெற முடியுமா என்று முடிவெடுக்க வேண்டியதாகும். அப்படியாயின், அந்த முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த பவர் டெவலெப்மெண்ட் கமிட்டியின் கூட்டத்திலே என்னென்ன விவாதிக்கப்பட்டதோ, அவைகளை விவரமாகச் சொன்னேன். மற்ற தகவல்கள் என்னிடம் இல்லை.

SRI R. SRINIVASA IYER : Sir, how far has the proposal to form a common grid for the four States in the Southern Zone materialized at the meeting?

THE HON. SRI V. RAMAIAH : Sir, as far as this meeting is concerned, I have just narrated what subjects were discussed at the meeting. But conclusions have to be taken by the Southern Zonal Council as such, and till they take a decision, what has transpired in this meeting cannot be given out.

SRI K. VINAYAKAM : Sir, were any subjects concerning matters of letting more water in the Palar river discussed at this meeting?

THE HON. SRI V. RAMAIAH : This is a sub-committee of the Power Development Committee. I do not see where the Palar water comes in there.

SRI A. GOVINDASAMY : புதுச்சேரி இந்திய யூனியனில் சேர்ந்த பிறகு, அங்கு முக்கிய கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கு இன்னும் மின்சாரம் கிடைக்காததினால், புதுச்சேரி மின்சார போர்டை தென் ஆற்காடு ஜில்லாவோடு சேர்த்து, அங்கே மின்சார வசதி கிடைக்க அரசாங்கம் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் பவர் டெவலெப்மெண்ட் கமிட்டியில் என்னென்ன விவாதிக்கப்பட்டது என்பதாகும். கனம் அங்கத்தினர் வேறு கேள்வி போட்டால், பதில் தர வசதியாக இருக்கும்.

18th February 1961]

SRI N. K. PALANISAMI : *கனம் அமைச்சர் அவர்கள் எல்லா மாகாணங்களிலும் ஒரே "டாரிப்" விதிப்பது பற்றி விவாதிக்கப் பட்டது என்று சொன்னார்கள். அப்படியானால் நம்முடைய மாகாணத்திற்கு எந்த அளவு சார்ஜ் விதிக்கப்படுகிறது? பல சமயங்களில் நமது மாகாணத்தில் சார்ஜ் குறைவாக விதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால், சார்ஜை உயர்த்துவதற்கு திட்டமா? அல்லது இன்னும் குறைப்பதற்கு உத்தேசமா?*

THE HON. SRI V. RAMAIAH : *இந்த சப்-கமிட்டியில் விவாதிக்கப்பட்டது பூராவையும் மூலக் கேள்விக்கு பதில் அளித்த நேரத்தில் சொன்னேன். என்ன முடிவு, எந்த மாதிரி சாதகமாகும் என்பதெல்லாம் சதர்ன் ஜோனல் கவுன்சில் கூட்டம் கூடினால் தான் தெரியும்.*

Handloom

* 330 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

கைத்தறி தொழிலுக்கு நிதி உதவிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have included in the draft Third Five-Year Plan a scheme for the establishment of Handloom Finance Corporation in this State with Central assistance.

SRI S. M. ANNAMALAI : *இதைக் குறித்து ஸ்டேட் ஹாண்ட்லூம் போர்டின் அபிப்பிராயம் என்ன? இதுபற்றி அவர்களோ சர்க்கார் கலந்தாலோசித்தார்களா?*

THE HON. SRI R. VENKATARAMAN : *1959-ம் வருஷத்தில் தென் பிராந்திய மண்டலத்தில் இருக்கக்கூடிய கைத்தறி இலாகா மந்திரிகள் எல்லோரும் இங்கு கூடினார்கள். இங்கு செமினார் நடந்தது. அந்தச் செமினாரில் எந்தவிதமான நிதிக் கார்ப்பரேஷன் வைக்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவை இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்கள்.*

SRI A. A. RASHEED : May I know whether any financial aid has been given to the handloom weavers on account of the accumulation of "Bleeding Madras" cloth?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, it is a different question.

SRI K. VINAYAKAM : Sir, what is the financial commitment of this Corporation and whether financial aid would be got from the Central Government and if so, what will be the method by which this handloom industry would be assisted?